தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1974 மார்ச் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 591, 592, 593, 594, 595 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப் படுகின்றன.

அரிசன மாணவர் விடுதிகள்.

*** 596. வினா—திரு. த. சோனையா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனத்தில் வாடகைக் கட்டடத்தில் உள்ள அரிசன மாணவர் இலவச விடுதிக்குச் சொந்த கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இனிமேலாவது கட்டடம் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இயக்குநரிட மிருந்து எந்தவித செயற்குறிப்பும் வரவில்லை. ஆனால், இராமனுதபுரம் மாவட்டத்திலிருந்து ஏழு கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் வந்திருக்கின்றன. அவைதான் இன்றைக்கு அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த வாடகைக் கட்டடத்திற்கு மொத்தம் எவ்வளவு ரூபாய் வாடகை தரப்படுகிறது? எத்தனை ஆண்டுக்காலமாக இந்த விடுதி வாடகைக் கட்டடத்தில் இருந்துவருகிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: வாடகைக் கட்டடமா என்பது பற்றிய விவரம் இப்பொழுது இல்லை. "சொந்தக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?" என்ற மூலக் கேள்விக்கு "இல்லை" என்று பதில் அளித்தேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: சென்ற ஆண்டு பட்ஜெட்டில், இம்மாதிரி அரிசன, பிற்பட்ட மாணவர்களுக்குரிய விடுதிகள் கட்டுவதற்காக இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதே, அதில் ஏதாவது செலவழிக்கப்பட்டிருக்கிறதா? இதுவரை கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கடன் கொடுப்பதாக உறுதியளித்த வங்கிகள் கடன் கொடுக்க மறுத்துவிட்டன. எனவேதான், இந்த ஆண்டு நலத்துறை மானியத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து, கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, பழனியில் இருக்கும் அரிசன மாணவர் விடுதி வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அதன் தரைப் பகுதி முழுவதும் பள்ளமும் மேடுமாக உள்ளது. அதைச் சீர்திருத்திக் கொடுக்க கட்டட உரிமையாளர் மறுக்கிறார். ஆகவே, அந்தக் கட்டடத்திற்கு பதில், அரசாங்கமே புதிய கட்டடம் ஒன்றைக் கட்டி, அங்கு இந்த விடுதியை மாற்றுவதற்கு முன்வருமா? அல்லது, வேறு நல்ல கட்டடத்திற்காவது அந்த விடுதியை உடனடியாக மாற்ற அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல, மாணவர் விடுதிகள் இருக்கும் பல கட்டடங்கள் அப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றன என்பதை மனத்திலே வைத்துத்தான் அரசு, கடந்த ஆண்டு வங்கிகள் மூலமாக கடனுதவி பெற்று புதிய கட்டடங்கள் கட்டுவதாக இருந்தது. ஆனால், உத்தரவாதம் கொடுத்திருந்த வங்கிகள் பிறகு கடன் தர மறுத்துவிட்டார்கள். அதனால் அரசே சொந்த நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கட்டடங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதிலே எந்தெந்த விடுதிகளை முதலில் எடுத்துக் கொள்வது என்று பரிசிலனை செய்து அந்த விடுதிகளை அரசு கட்ட முன்வரும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்கு விடுதிகள் கட்டுவதைப் பொறுத்து, தனியார் நடத்தும் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு அவர்கள் கட்டடம் கட்டினால் அதற்கு ஏதாவது நிதி உதவி செய்ய அரசுக்கு ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட திட்டம் இப்பொழுது இல்லை.

* 597 வினா.—திரு. டி. சி. இம்மசாயக் கவுண்டர்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்ரம்பள்ளியிலும், கத்திலியிலும் அரிசன மாணவர் விடுதி திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?